UNIVERSITI MALAYA
KUALA LUMPUR

# மலாயா பல்கலைக்கழகம், மலேசியா

உடன்

## அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

**Aran International E Journal Of Tamil Research (AIJTR)**

(ISSN:2582-399X - Peer reviewed, open access International Journal, www.aranejournal.com)

## நித்திலம் பப்ளிகேஷன்ஸ்

**Niththilam Publications (NP)**

Publish A Book Chapter and Journal Publications

## வாரணம் பன்னாட்டுச் சமய ஆய்விதழ்

**Varanam International Journal of Religious Studies (VIJRS)**

## அரண் தமிழ் அறக்கட்டளை

(அரசு பதிவெண்:*39/2020*) உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை (தமிழ்நாடு அரசு நிறுவனம்)
இணைப்பு பெற்றது. இணைப்பு எண்: உதச/த*109UTS/TN109, 2020*)

**ARAN TAMIL TRUST**

இணைந்து வழங்கும்

## பல்துறை பன்னாட்டுக் கருத்தரங்கம் மற்றும் விருது விழா-2025

# தமிழும் பிறதுறைகளும் - புதிய பார்வை

தொகுப்பாசிரியர்

முதுமுனைவர் **பிரியாகிருஷ்ணன்**

**கருத்தரங்க நாள் : 21.02.2025**
**இடம்: மலாயா பல்கலைக்கழகம், மலேசியா**

| வ.எண். | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | தொல்காப்பியம் - பொருளதிகாரம் - மரபியல் - ஒரு பார்வை<br>- பேரா. பொ. சேகர் | 1 |
| 2 | தொல்காப்பிய இடையியல் நோக்கில் ஐங்குறுநூற்று மருதத்திணைப்பாடல்கள்<br>- முனைவர் இரா. தனலெட்சுமி | 8 |
| 3 | தொல்காப்பியம் கூறும் நடனச் செய்திகள்<br>- கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ் | 20 |
| 4 | தொல்காப்பியத்தில் அறிவியல் கூறுகள்<br>- செ. பாலசுந்தரம் | 27 |
| 5 | உறழ்ச்சியும் பிறழ்ச்சியும்<br>- கி. ராஜ்குமார் | 31 |
| 6 | நன்னூலாரின் கல்வியியல் சிந்தனைகள்<br>- முனைவர் மோ.பேபி | 38 |
| 7 | இலக்கிய இலக்கணங்களில் நவிலும் கல்விக் கோட்பாட்டுச் சிந்தனைகள்<br>- முனைவர் வெ.செல்லத்தாய் | 44 |
| 8 | தமிழ் இலக்கண நூல்களில் முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்கள் மாற்றமும் வளர்ச்சியும்<br>- முனைவர் வி. சேகர் | 53 |
| 9 | எட்டுத் தொகையில் வானவியல் சிந்தனைகள்<br>- பா. சுரேஷ் | 60 |
| 10 | புறநானூற்றில் வானவியல் கூறுகள்<br>- திருமதி. சா. பாரதி | 65 |
| 11 | புறநானூற்றில் காணலாகும் வள்ளல்களின் இறப்பு - பதிவு<br>- முனைவர் செ. த. சுமதி | 70 |
| 12 | அழகியல் பார்வையில் அகநானூறு<br>- முனைவர் ச.சு. அருள்பிரகாஷ் | 74 |
| 13 | செவ்வியல் இலக்கியமான கலித்தொகையில் காணப்படும் நாடக கூறுகள்<br>- முனைவர் ப. சாந்தி | 79 |
| 14 | ஆற்றுப்படையின் நோக்கமும் தற்காலத் தேவையும்<br>- கு. மாலா | 87 |
| 15 | சங்க இலக்கியத்தில் வெள்ளி (VENUS) ஒரு சிறப்புப் பார்வை<br>- முனைவர் ச. ஜெயா | 92 |
| 16 | சங்கத் தமிழரின் வானியல் அறிவு<br>- முனைவர் வே. மீனா | 98 |
| 17 | சங்கத் தமிழரின் விசும்பு<br>- மு. கயல்விழி | 105 |
| 18 | சங்க இலக்கியங்கள் காட்டும் வாணிபம்<br>- சு. கோபாலகிருஷ்ணன் | 112 |
| 19 | சங்க இலக்கியங்களின் வழி அறியலாகும் தமிழகப்பொருளாதாரம்<br>- முனைவர் தா. ஜெயந்தி | 121 |
| 20 | தமிழ்நாட்டில் சங்க காலத்திலும், நவீனக் காலத்திலும் உள்ள பெண்களின் வரலாறு பற்றிய ஆய்வு<br>- Nagarajan. S | 126 |
| 21 | மெய்யியல் நோக்கில் சங்கத்தமிழ்<br>- முனைவர் கா. திருநாவுக்கரசு | 131 |

# ஆற்றுப்படையின் நோக்கமும் தற்காலத் தேவையும்

**கு. மாலா**

**முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர் -**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,**
**பல்லாவரம், சென்னை - 600117**

**முனைவர் ம. பிரகாஷ்**

**உதவிப்பேராசிரியர் & நெறியாளர்,**
**தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,**
**பல்லாவரம், சென்னை - 600117**

**ஆய்வுச்சுருக்கம்:**

சிற்றிலக்கியங்களில் ஒன்றான ஆற்றுப்படை என்பதன் விளக்கம், ஆற்றுப்படையின் உளவியல் சார்ந்த இன்றியமையாமை, தற்காலத்தில் இதன் தேவை, பத்துப்பாட்டில் செம்பாதியாக விளங்கக்கூடிய ஐந்து ஆற்றுப்படை நூல்களால் தெரிய வரும் கருத்துக்கள், ஆற்றுப்படையின் நோக்கம் ஆகியவற்றை நுணுகி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை :**

ஆற்றுப்படை சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றாகும். ஆறு என்பது வழி. ஆற்றுப்படை என்றால் வழிக்கண் செலுத்துதல். பாணர்கள் முதலான கலைஞர்களும் புலவர்களும் தம் வறுமையைப் போக்கிக்கொள்ள 'பழுமரம் நாடிச்செல்லும் பறவைகளைப்' போல பல்வேறு அரசர்களை நாடிச் சென்று தம் திறமையாலும் புலமையாலும் பரிசில் பெறுவது வழக்கம். இவ்வாறு பரிசில் பெற்ற இரவலன் ஒருவன் பரிசிலுக்காக ஏங்கித் தவிக்கும் இரவலனை வழிப்படுத்துவதே ஆற்றுப்படை ஆகும். ஆற்றுப்படை ஆசிரியப்பாவால் அமைந்தது. இதன் பல்வேறு கூறுகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

**ஆற்றுப்படையின் நோக்கம் :**

ஆற்றுப்படையின் நோக்கம், தன்னலம் கருதாத தூய உள்ளத்துடன், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கிணங்க, வறுமையாலும் அதனால் ஏற்பட்ட துன்பத்தாலும் மன உறுதி இழந்து, சோர்வடைந்தவருக்கு நம்பிக்கையூட்டிப் புத்துணர்வூட்டும் வகையில், தன்னுடைய நிலையைப் புலப்படுத்தி, தாம் பெற்ற நன்மைகளையும் பரிசில்களையும் குறிப்பிட்டு, அதனை அளித்த அரசன் அல்லது வள்ளல்களிடம் நெறிப்படுத்துதலாகும். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்ற வள்ளலாரின் வாக்கு போலத் தாம் பெற்ற பெருவளத்தைப் பற்றி , சிறிதும் ஒளிவு மறைவின்றிக் கூறி, அவர்கள் வாட்டத்தைப் போக்கி , நெறிப்படுத்தும் ஆற்றுப்படையின் இலக்கணத்தைத் தொல்காப்பியம், பன்னிருபாட்டியல் , புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றில் காணலாம்.

**"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"** **( தொல் - புறம் - 88)**

நச்சினார்க்கினியர், "ஆடன்மாந்தரும், பாடற் பாணரும், கருவிப் பொருநரும் இவருட் பெண்பாலாகிய விறலியும் , நாற்பாலரும் தாம் பெருஞ்செல்வத்தை எதிர் வந்த வறியோருக்கு அறிவுறுத்தி அவரும் சென்று தாம் பெற்றவையெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடு " என்று குறிப்பிட்டுள்ளார்..

கூத்தர், பாணர், பொருநர், விறலி ஆகியோருடன் புலவரையும் சேர்த்து புறப்பொருள் வெண்பாமாலை ஆற்றுப்படைக்கான விளக்கத்தைத் தருகிறது.

ஆற்றுப்படை நூல்கள் பாட்டுடைத் தலைவனின் வீரம், கொடை, ஆட்சிச் சிறப்பு ஆகியவற்றை எடுத்துரைக்கும். பத்துப்பாட்டில் ஐந்து நூல்கள் ஆற்றுப்படை நூல்களாக உள்ளன. இவற்றுள், நக்கீரரால் இயற்றப்பட்ட திருமுருகாற்றுப்படையானது "புலவராற்றுப்படை" எனவும் வழங்கப்பெறும் திருமுருகாற்றுப்படை பிற ஆற்றுப்படையினின்றும் வேறுபட்டு, முருகப் பெருமானின் திருவருளைப் பெற விரும்புவோரை அவனிடம் ஆற்றுப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளதால், இது பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

"வீடு பெறுதற்கு சமைந்தான் ஒர் இரவலனை வீடு பெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்ததென்று" என்று நச்சினார்க்கினியர் கூறுகிறார்.

இனி ஆற்றுப்படையின் இன்றியமையாமையையும், அதன் மூலம் தெரிய வரும் கருத்துக்களையும் விரிவாகக் காணலாம்.

**வழிக்கண் செலுத்துதல் :**

ஆற்றுப்படை என்பது வழிக்கண் செலுத்துதல் என்று கண்டோம். இது பல பொருண்மைகளை உள்ளடக்கியது.

முதலாவதாக, ஆற்றுப்படை, யாரிடம் செல்ல வேண்டும் என்ற வினாவுக்கு விடையளிக்கும் வகையில் எந்த அரசனை நாடினால் வேண்டுவன பெறலாம் என்னும் செய்தியைக் கூறும். எடுத்துக்காட்டாக, பெரும்பாணாற்றுப்படை தொண்டைமான் இளந்திரையனின் சிறப்புக்களைப் பற்றி விரிவாகக் கூறி, அவனிடம் செல்லுமாறு பெரும்பாணனை ஆற்றுப்படுத்தும். ஒய்மாநாட்டரசன் நல்லியக்கோடனின் வள்ளன்மையைச் சிறுபாணாற்றுப்படை விளக்குகின்றது. பொருநராற்றுப்படை கரிகால் பெருவளத்தானைப் பற்றியும் மலைபடுகடாம் நன்னன் சேய்நன்னனைப் பற்றியும் பறைசாற்றுகின்றது. . இவ்வாறாக, வேண்டுவன பெற யாரை நாடவேண்டும் என்பதை ஆற்றுப்படை விரிவாக விளக்கும்.

ஒய்மாநாட்டரசன் நல்லியக்கோடன் ஒரு சிற்றரசனே ஆயினும், அவன் வள்ளன்மையை எடுத்துக்கூறி ஆற்றுப்படுத்தும் வகையில்,

**"எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்,**
**விரிகடல் வேலி வியலகம் விளங்க,**
**ஒரு தான் தாங்கிய உரனுடை நோன் தாள்"** **(சிறுபாணாற்றுப்படை113-115)**

என்ற அடிகள் விளக்கும். இது மட்டுமின்றி வஞ்சி, மதுரை, உறந்தை ஆகிய முடியுடை மூவேந்தர்களிடம் பெறும் பரிசில்களனைத்தும் கூட வறிதே என்று குறிப்பிடுவதிலிருந்து இவன் எப்பேற்பட்ட பெருங்கொடையாளன் என்பதைக்கூறி அவனிடம் சென்றால் வறுமை நீங்கும் என்று வழிநடத்தப்படுகிறது.

அடுத்ததாக, எவ்வாறு அவ்விடத்துக்குச் செல்ல வேண்டும் என்பது குறித்தும், செல்லும் பாதை எப்படிப்பட்டது, அவர்கள் கடக்கும் நிலப்பகுதிகள், குடியிருப்புகள், மக்கள், அம்மக்களின் தொழில், வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பற்றி விளக்குவதாக அமையும். அவ்வாறு செல்லும்போது எங்கெங்கு, எத்தகைய உணவுகள் கிடைக்கும், இளைப்பாறும் இடங்கள் போன்றவை மட்டுமின்றி, எத்தகைய தடைகளும் சிக்கல்களும் இருக்கக்கூடும்; அவற்றை எவ்வாறு கையாள வேண்டும் என்பனவற்றையும் ஆற்றுப்படை உள்ளடக்கியிருக்கும்.

மலைபடுகடாமில், விளைநிலங்களைப் பாழாக்கும் பன்றிகளுக்கு வைக்கப்பட்டிருக்கும் பொறிகளில் சிக்காமலிருக்க இரவுப் பயணத்தைத் தவிர்த்து, பொழுது விடிந்த பின் செல்லவேண்டும் என்பதை,

**"விளைபுன நிழத்தலிற் கேழல் அஞ்சிப்**
**புழைதொறு மாட்டிய இருங்கல் அரும்பொறி**
**உடைய வாறே நள்ளிருள் அலரி**
**விரிந்த விடியல் வைகினிர் கழிமின்"** **(மலைபடுகடாம் 193 - 196)**

என்ற அடிகள் அறிவுறுத்துகின்றன. பாம்புகள் உறையும் இடங்கள், கவண் கற்களால் ஏற்படும் இடர்ப்பாடுகள், காட்டாறுகளில் ஏற்படக்கூடிய ஊறுகள், வழுக்கக்கூடிய குளக்கரைகள் போன்ற பல

சிக்கல்களையும் மேற்கொள்ளவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பற்றி விரித்துக்கூறி நெறிப்படுத்துகின்றது.

குறிப்பிட்ட புரவலனை ஏன் நாடவேண்டும் என்ற வினாவுக்கும் விடையாக அமையும். எடுத்துக்காட்டாக, அவ்வரசன் அளிக்கும் பரிசில் போதுமானதாக இருக்குமா அல்லது வேறு ஒருவரையும் நாடவேண்டி இருக்குமா என்ற ஐயத்தைத் தீர்க்கும் வகையில், என்ன பரிசில் கிடைக்கும்; எந்த அளவு கிடைக்கும்; அம்மன்னனின் அவைக்குச் செல்லும்போது எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் போன்ற அத்துணை வினாக்களும் விடை தருவதாக ஆற்றுப்படை அமைகிறது.

**"துராஅய் துற்றிய துருவையும் புழுக்கின்**
**பராஅரை வேவை பருகெனத் தண்டிக்**
**காழிற் சுட்ட கோழூன் கொழுங்குறை**
**யூழி னூழின் வாய்வெய் தொற்றி**
**யவையவை முனிகுவ மெனினே**
**வேறுபல் லுருவின் விரகுதந் திரீஇ"** **(பொருநராற்றுப்படை - 103-108)**

என்ற அடிகள் கரிகால் பெருவளத்தான் எவ்வாறு தன்னைத் தேடி வருபவர்களை வரவேற்று உணவளித்தான் என்பதை விளக்கும்.

இவ்வாறு பரிசில் பெற்று வந்த, கூத்தர், பாணர் , பொருநர் , விறலி போன்றோர் தமக்குப் பரிசில் அளித்த மன்னனிடம் செல்லுமாறு பல்வேறு தகவல்களையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல விரித்துக் கூறுவதே ஆற்றுப்படை.

**பழுமரந்தேரும் பறவை போலக்**
**கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்**
**………………………………………………………..**
**வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி**
**வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்டு**
**யாமவ ணின்றும் வருது………….."** **(பெரும்பாணாற்றுப்படை- 20-28)**

என்ற அடிகள் வறுமையுற்ற பாணனுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்து அவனை ஆற்றுப்படுத்துகின்றது.

**இன்றைய சூழலில் ஆற்றுப்படை :**

இன்றைய சூழலில் ஆற்றுப்படை என்பது அனைத்துத் துறைகளிலும் மிகவும் இன்றியமையாதத்தாகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த சூழலுக்கும் தற்போதைய சூழலுக்கும் மக்களின் குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை ஆகியவற்றில் உளவியல் சார்ந்து மிகப்பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை சில நேரங்களில் , நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்துவிடுகின்றன. கல்வி, வேலைவாய்ப்பு, சுயதொழில், உடல்நலம், மனநலம், திருமணம் முதலான அனைத்துத் துறைகளிலும் இளம் தலைமுறையினரை ஆற்றுப்படுத்தவேண்டிய தேவை உள்ளது.

**கல்வித்துறை :**

குழந்தைகளுக்கான கல்விமுறை என்பது பல வகைகளில் தற்போது காணப்படுகின்றது. மாண்டிசோரி, திறந்த நிலைப் பள்ளி, சமச்சீர் கல்வி, மத்திய இடைநிலைக் கல்வி, இந்திய இடைநிலைக்கல்வி, சர்வதேச பொதுச் சான்றிதழ் இடைநிலைக் கல்வி எனப் பல்வேறு முறைகளில் மாணவர்கள் தங்கள் பள்ளிப்படிப்பை மேற்கொள்ளமுடியும். இது போலவே கல்வி நிறுவனங்களும் ஏராளமாகக் காணப்படுகின்றன. கல்லூரிகளிலும், கலை, அறிவியல் தொடங்கி, தொழில்நுட்பம், மருத்துவம், சட்டம் முதலான படிப்புகளுக்கும் பட்ட மேற்படிப்புகளுக்கும், முனைவர், முதுமுனைவர் போன்ற அனைத்து வகையான பட்டங்களைப் பெறவும் சரியான வழிகாட்டுதல்களும் அதற்கான நுழைவுத்தேர்வு குறித்த தயாரிப்புகளுக்கும் மற்றும் வெளிநாட்டில் பட்டமேற்படிப்பினைத் தொடர விரும்பும் மாணவர்களுக்குத் தேவையான வழிமுறைகள், கடவுச்சீட்டு, வெளிநாட்டு நுழைவுச் சான்று பெறுதல் குறித்த புரிதல்களுக்கும் சரியான தகவல்கள் தரப்படுதல் வேண்டும். இவை மட்டுமின்றி, அரசுப்பணிகளுக்கான போட்டித்தேர்வுகள் குறித்த விபரங்கள், தயாரிப்புகள் போன்றவை

குறித்தும் ஆற்றுப்படுத்தப் படவேண்டும். இது தனி மனிதர்கள் தங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதாலும், இதற்கான நிறுவனங்களாலும் சாத்தியமாகின்றது.

**கல்வியில் உளவியல் சார்ந்த சிக்கல்கள் :**

இளம் தலைமுறைனர் முதல் முதியோர் வரை தற்போது எளிதில் மன அழுத்தத்திற்கு ஆளாகி விடுகின்றனர். கல்வி கற்பது என்பதுதான் இலக்காக இருக்கவேண்டுமே தவிர, அது மன அழுத்தத்தைத் தரக்கூடியதாக இருக்கக்கூடாது. இன்றைய குடும்பச் சூழலில் கூட்டுக்குடும்பங்கள் குறைந்துவிட்ட காரணத்தாலும் பெற்றோர்கள் இருவருமே வேலைக்குச் செல்லும் சூழலில் குழந்தைகளின் படிப்பு என்பது சவாலான ஒன்றாக அமைந்துவிடுகின்றது. சில இடங்களில் பெற்றோர் கொடுக்கும் அழுத்தமும், உடன் பயிலும் மாணவர்களின் போட்டியும் படிக்கும் மாணவர்களை நிலை தடுமாறச் செய்துவிடுகின்றன. இவை மட்டுமின்றி தற்போது பதின்பருவம் மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களின் கவனச் சிதறலுக்குக் காரணமாகக் கைபேசியிலும் கணிணியிலும் விளையாடும் விளையாட்டுக்கள், புகையிலை, போதை மற்றும் குடிப்பழக்கம் போன்றவை காரணமாக அமைகின்றன. இதற்கும் உளவியல் சார்ந்த வழிக்காட்டுதல்கள் தேவைப்படுகின்றன. தன்னம்பிக்கை அளித்து தேர்வுகளை அச்சமின்றி சந்திக்கும் வழிக்காட்டுதல்கள் மிகவும் இன்றியமையாதது. இதில் பள்ளி மற்றும் கல்லூரிகளின் பங்கும் குறிப்பிடத்தக்கதாகும்.

வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் செய்ய விரும்பும் இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கான ஏராளமான வாய்ப்புகள் கொட்டிக்கிடந்தாலும் சரியான திக்கில் வழிநடத்தப்படவேண்டும்.

**திருமணம் சார்ந்த வழிகாட்டுதல்கள்:**

முற்காலத்தில், தெரிந்தவர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர் மூலமாகவே மணமகன் மற்றும் மணமகள் தேர்வு நடக்கும். தற்போதைய காலத்தில் இதற்கான ஏராளமான இணையதளங்கள் உள்ளன. இதிலும் பல மோசடிகள் நடப்பதால், சரியான வழிகாட்டுதல்கள் தேவைப்படுகின்றன. இவை மட்டுமின்றி, திருமணமான இணையர் தங்களுக்குள் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்கும் நல்வழிகாட்டி நெறிப்படுத்தவும் உதவிகள் தேவைப்படுகின்றன.

**உடல் நலம் சார்ந்தவை:**

மருத்துவத்துறை வெகுவாக முன்னேறி இருந்தாலும் மக்கள் தங்கள் உடல்நலம் சார்ந்த அடிப்படை புரிதலுடனிருத்தல் வேண்டும். அக்காலத்தில் பாட்டி வைத்தியம், நாட்டு வைத்தியம் கை வைத்தியம் என்று பல்வேறு வகைகளில் சொல்லப்பட்டவை மக்களைப் பதற்றப்படாமல் ஆற்றுப்படுத்தின. தற்போது உணவுப்பழக்கம், தூக்கமின்மை, போதிய உடலுழைப்பின்மையால் பல நோய்கள் அழையா விருந்தாளியாக உடலில் வந்து தங்கிவிடுகின்றன. கல்வி நிறுவனங்கள் போலவே மருத்துவமனைகளும் பல்கிப் பெருகிவிட்டதால் மக்களுக்கான சரியான வழிக்காட்டுதல்கள் தேவை.

வாழ்வதற்கான சரியான வழிகாட்டுதல் இன்மை, சில நேரங்களில் அவர்களிடம் தற்கொலை எண்ணத்தைக் கூட தூண்டிவிடுகின்றது. சரியான நேரத்தில் , சரியான முறையில் இவர்கள் ஆற்றுப்படுத்தப்படும்போது பல பெரிய சிக்கல்கள் தவிர்க்கப்படுகின்றன.

**முடிவுரை:**

நம்பிக்கையிழந்து அலைந்து திரிபவர்களுக்கு வாழ்வில் ஒரு பிடிப்பைக் கொடுக்கும் வகையில் ஆற்றுப்படை இலக்கியங்கள் அமைந்துள்ளன. இருள் சூழ்ந்த இடத்தில் ஒரு சிறிய அகல் விளக்கு எப்படி ஒளி கொடுக்குமோ, அப்படித்தான் ஆற்றுப்படுத்துதலும். தெரிந்த, சரியான, பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்து பயனாளர்களை ஆற்றுப்படுத்தும்போது அவர்கள் வாழ்வில் புத்தொளி பிறக்கின்றது. ஆற்றுப்படை இலக்கியங்கள் சங்ககாலம் மட்டுமின்றி எக்காலத்துக்கும் பயனளிக்கும் வகையில் உள்ளது என்பதில் ஐயமில்லை.

**துணைநூற்பட்டியல் :**

1. உ.வே.சா., பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், பீர் அச்சுக்கூடம், சென்னை, *1956*.

2. இரா. மோகன்(உ.ஆ)., அ. மா. பரிமணம்., கு.வெ.பா(தொ.ஆ)., சங்க இலக்கியம் பத்துப்பாட்டு முதல் தொகுதி மூலமும் உரையும்., நெயூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

3. நச்சினார்க்கினியர் உரை - கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை, ஏழாம் பதிப்பு 1967-.

4. தொல்காப்பியம் பொருளதிகாரம் நச்சினார்க்கினியர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக வெளியீடு, 1965.

5. இரா. மோகன்(உ.ஆ)., அ. மா. பரிமணம்., கு.வெ.பா(தொ.ஆ)., சங்க இலக்கியம் பத்துப்பாட்டு முதல் தொகுதி மூலமும் உரையும்., நெயூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

6. இரா. இராகவையங்கார்., பெரும்பாணாற்றுப்படை மூலமும் உரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1958.

7. சோமசுந்தரனார். பொ. வே (உ.ஆ), மலைபடுகடாம், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (லி), சென்னை, 2008.

8. இராசமாணிக்கனார். மா(1970), பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.